[1978 மார்ச் 10

குழாய்களைச் செப்பனிடல்.

* வினா 499—திரு. துரை. கலியமூர்த்தி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் குடிதண்ணீர் குழாய்களைச் சீர் செய்ய நியமிக்கப்பட்ட ஒருவரால் ஒன்றியத்தினுடைய எல்லா ஊராட்சி குடிநீர் குழாய்களைச் செப்பனிட முடியவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) கேள்வியில் கண்டுள்ளபடிக்கான நிலை குறித்து அரசுக்குத் தகவல் எதுவும் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. துரை கலியமூர்த்தி: ஊராட்சி ஒன்றியங்களில் எல்லாப் பஞ்சாயத்துகளையும் சேர்த்து ஒரு பிட்டர் நியமித்து அப்படித்தான் இருந்தது. தற்போது அந்த நிலை இல்லையென்று முடிவு எடுத்துள்ளார்கள். அதோடு மேல் நிலை தொட்டிகளுக்கு பைப் இணைப்புக் கொடுக்க பஞ்சாயத்துக்களில் நிதி நிலைமை சரியாக இல்லாததால் அதைச் செய்யமுடியாமல் இருக்கிறது. ஆகவே அரசே மானியம் கொடுத்து எல்லாத் தெருக்களுக்கும் பைப் இணைப்புக் கொடுக்கமுன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: கேள்வி பம்பு செட்டுகள் பராமரிப்பு பற்றியதாகும்.

திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு தலைவர் அவர்களே, பழுது பட்ட குடிதண்ணீர் குழாய்களைப் பழுது பார்க்கின்ற வேலையை பஞ்சாயத்துக்கள் மேற்கொள்கின்றதா? அப்படியென்றால், தங்களிடம் குடிதண்ணீர் குழாய்களைப் பழுது பார்ப்பதற்கு பணம் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே அரசே அந்தச் செலவை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1978 மார்ச் 10]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: 100 பம்புசெட்டுகளுக்கு ஒரு மெக்கானிக் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதனால் 3, 4 யூனியன்களை இவர் கவனிக்க வேண்டியிருந்ததால், சிரமம் இருந்தது. 100 பம்புசெட்டுகளுக்குக் குறைவாக இருந்தாலும், இரண்டு ஒன்றியங்களிலுமுள்ள பழுதுபட்ட பம்பு செட்டுகளைப் பார்த்தால் போதும் என்று அரசு உத்தரவிடப்பட்டுள்ளது. அப்படி வந்த பிறகு இப்போது 99 சதவீதமும் நல்ல முறையில் ரிப்பேர் செய்யப்பட்டு நன்றாக செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ராஜன் வாய்க்கால் பாலம்.

* வினா 500—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஒன்றியம், குறிச்சி பஞ்சாயத்துப் பகுதியில் உள்ள ராஜன் வாய்க்கால் பாலத்தினை சீர் செய்திடும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இப்பாலத்திற்கு மேம்பாடு எதுவும் தேவையில்லை. இப்பாலத்தின் அணுகு சாலை ரூ. 10,500 செலவில் அண்மையில் மேம்பாடு செய்யப்பட்டது.

வந்தவாசி—கள்ளக்குறிச்சி பேருந்துப்பணி.

* வினா 501—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் வந்தவாசி—கள்ளக்குறிச்சிக்கு இடையிலான பேருந்துப் பணியினை மீண்டும் துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தந்தை பெரியார் போக்குவரத்துக்கழகத்தின் வந்தவாசி—கள்ளக்குறிச்சிக்கு இடையிலான பேருந்துப்பணி தொடர்ந்து நடைபெறுவதால், மீண்டும் துவக்கச் செயற்குறிப்பு என்ற வினாவுக்கு இடமே இல்லை.